# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අති විශෙෂ அதி விசேஷமானது**

**අංක 2466/32 - 2025 දෙසැම්බර් මස 12 වැනි සිකුරාදා - 2025.12.12**

2466/32 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 12 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

5 ஆம் பிரிவின் படியான பிரகடனம்

கீழ்க்காணும் காணி ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதாய் இருக்கின்றதென்றும் காணி எடுத்தற் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அது எடுத்துக் கொள்ளப்படுமென்றும் காணி எடுத்தற் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (1) ஆம் உபபிரிவின் பிரகாரம் கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் குரகமகே தொன் லால் காந்த ஆகிய நான், இத்தால் பிரகடனம் செய்கின்றேன்.

**குண்டசாலை ஹாரகம நீர் வழங்கல் திட்டத்தின் நாரம்பனாவ பூஸ்டர் பம்பிக்கும் நிலையத்தை (அங்குருநெலே கடுல்லே ஹேன) நிர்மாணிப்பதற்காக காணித்துண்டு ஒன்றை எடுத்துக் கொள்ளல்.**

மத்திய மாகாணத்தின் கண்டி மாவட்டத்தில் குண்டசாலை பிரதேச செயலாளர் பிரிவில், பலிஸ்பத்துவ மேற்கு சிறிய பிரிவில், இலக்கம் 723, நாரம்பனாவ கிழக்கு கிராம அலுவலர் பிரிவில், நாரம்பனாவ கிராமத்தில் அமைந்த நில அளவையாளர் நாயகத்தினால் 2023.02.28 ஆம் திகதி தயாரிக்கப்பட்ட Maha/KND/2023/9 இலக்கம் கொண்ட ஆரம்ப வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள எல்லைகளை உடைய கீழ் குறிப்பிடப்படும் காணித்துண்டு:

01. துண்டு ‘A’ – அங்குருநெலே கடுல்லேஹேன - **விஸ்தீரணம்: 0.0759 ஹெக்டயார்**

வடக்கு : மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் எம். டபிள்யூ. ஹீன்பண்டா உரிமை கோரும் அங்குருநெலே கடுல்லேஹேன; கிழக்கு: எம். டபிள்யூ. ஹீன்பண்டா உரிமை கோரும் அங்குருநெலே கடுல்லேஹேன மற்றும் நாரம்பனாவ பஞ்ஞாகித்தி தேரர் உரிமை கோரும் அங்குருநெலே கடுல்லேஹேன; தெற்கு: நாரம்பனாவ பஞ்ஞாகித்தி தேரர் உரிமை கோரும் அங்குருநெலே கடுல்லேஹேன; மேற்கு : பாதை.

கே. டி. லால் காந்த,
கமத்தொழில், கால்நடை வளங்கள்,
காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர்.

எனது இல. : 4-3/18/2022/WS/16.
கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும்
நீர்ப்பாசன அமைச்சு,
“மிஹிகத மெதுர”, காணிச் செயலகம்,
இல. 1200/6, இராஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2025, செத்தெம்பர் 04.

EOG 12 - 0066



இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.

*இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*